உடைந்த உள்ளங்களுக்கு

# இயேசுவின் சமாதானம்

வருடம் 13

மாதம் 5



## இயேசு உங்களை உயர்த்துவார்

நவம்பர் 2014

ஏ.எஸ்.வி. ராபின்

# Sugajeeva Ministries

VGP Victory House, 2nd Floor,
37, Annasalai, Chennai - 600 002. India.
Tel : 91-44-6572 2232 / 4212 0183




Dr. V.G. Selvaraj
Vice President
VGP

## வாழ்த்துரை

**இயேசுவின் சமாதானம் 13வது வருட இதழ்**

என் உள்ளத்தில் மிக உயர்ந்த இடத்தில் நான் வைத்திருக்க கூடிய ஒரு நல்ல ஊழியர் அருமை சகோதரர் ஏ.எஸ்.வி. ராபின், 12 ஆண்டுகளுக்கு முன்பாக இயேசுவின் சமாதானம் என்கின்ற பெயரில் ஒரு சுவிசேப் பத்திரிகையை ஆரம்பித்து, வண்ணப்படங்களோடு அச்சடிக்கப்பட்டு வருகிறது. இதில் தேவ செய்திகள், சாட்சிகள், ஊழியச் செய்திகள் எல்லாம் அடங்கிய தரம்வாய்ந்த மாத இதழாக இந்த பத்திரிக்கை ஜெய நடைபோட தேவன் கிருபை செய்து வருகிறார்.

17 ஆண்டுகளுக்கு முன்பு கர்த்தரை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, இரட்சிப்பின் அளவிட முடியாத அன்பினால் ஈர்க்கப்பட்டு, அவருடைய ஊழியக்காரராக பரம அழைப்பைப் பெற்று, கோயமுத்தூரில் தன்னுடைய தலைமை ஊழிய அலுவலகத்தை ஸ்தாபித்து உலகெங்கும் சென்று அருமை இரட்சகர் இயேசுவின் சுவிசே ஊழியத்தை பாங்குற செய்து வருகிறார். கோவை, தமிழகம் மற்றும் இந்திய திரு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சுவிசே நற்செய்தி கூட்டங்கள், படை முயற்சி கூட்டங்களை மிக பிரம்மாண்டமாக நடத்தி வருகிறார். தாழ்மைக்கு இவர் ஒரு முன் மாதிரியாக திகழ்ந்து வருவதை இந்த 10 ஆண்டு காலமாக நான் பழகி, பார்த்தறிந்து அதற்கு சாட்சியாகவே இருக்கின்றேன்.

பரிசுத்த வேதம் சொல்கிறபடி தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் ( லூக் 14:11 ) என்கின்ற கர்த்தருடைய மதுர மொழிக்கு இலக்கணமாக திகழ்பவர் அருமை சகோதரர் ஏ.எஸ்.வி. ராபின். இவருடைய துணைவி அருமை சகோதரி பொற்செல்வி ராபின், இவரது அனைத்து ஊழியங்களுக்கும் உற்ற துணையாக விளங்கி வருகின்றார். இந்த இனிய தம்பதிக்கு ஊழிய வாரிசாக கர்த்தர் ஒரு நல்ல மகனை பரலோக கொடையாக அருளியிருக்கின்றார். கர்ப்பத்தின் கனி கர்த்தரால் கிடைக்கும் பலன். (சங் 127:4). ஆபிரகாமிற்கு ஒரு ஈசாக்கை போல் ஏ.எஸ்.வி. ராபினுக்கு அருமை மகன் ராஜ்லின்ட் ராபின் வாக்குத்தத்த மகனாக கர்த்தர் தந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அபிகேம் பெற்ற ஊழியக்காரராக இந்த மகனை கர்த்தர் எழுப்பியிருக்கிறார். இந்த நல்ல ஊழிய குடும்பத்தினருக்காகவும், உடன் ஊழியர்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபிப்பது நம் ஒவ்வொருவருடைய கடமை.

இயேசுவின் சமாதானம் என்கின்ற இந்த மாத இதழ் 13வது ஆண்டிலே அடி எடுத்து வைத்திருக்கின்ற இந்த நாளிலே பத்திரிக்கை ஊழியங்கள் பல மடங்காய் பெருகிட இயேசுவின் நாமத்தினால் நான் வாழ்த்துகிறேன். ஆசீர்வதிக்கிறேன். எபி. 6:14ன் படி நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்ற வாக்குதத்தத்தை சகோதருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் இந்த பத்திரிக்கை ஊழியத்திற்கும் ஒப்பு கொடுக்கின்றேன்.

**இந்த இயேசுவின் சமாதானம் பத்திரிக்கை இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பரியந்தம் நடப்பதாக.**

இப்படிக்கு
இயேசுவில் அன்பான சகோதரர்
**கார்டினல் ரெவ். டாக்டர் வி.ஜி. செல்வராஜ்**

# அன்புக் கடிதம்



## உங்களில் இருக்கும் இயேசு பெரியவர்

(1யோ. 4:4)

**என் அன்பு அண்ணன், தம்பி, அக்கா, தங்கைகளே!**

**மகிமையின் ராஜா இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரால் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன்.**

கடந்த மாதம் முழுவதும் கண்மணியைப் போல நம்மை பாதுகாத்த நம் பிதாவாகிய தேவனுக்கு உளமார்ந்த நன்றி செலுத்துவோம். அவரை மகிமைப்படுத்துவோம். ஆண்டவர் இயேசு எத்தனையோ ஆபத்திலிருந்து நம்மை தப்புவித்து காப்பாற்றி வந்தாரே! துன்ப நேரங்களில் நமக்கு ஆறுதல் தந்தாரே! இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட நம் இந்திய மற்றும் உலக மக்களுக்காக, அவர்களுடைய நல்வாழ்வுக்காக தொடர்ந்து ஒருமனப்பட்டு மனபாரத்தோடு ஜெபிப்போம். இக்காலத்தில் கர்த்தர் இயேசுவை பற்றிக் கொள்ளும் நம்பிக்கை மக்களிடத்தில் உண்டாக நாம் ஜெபிப்போம்.

உலகில் கோடிக்கானக்கான மக்கள் நம்மைவிட அதிகமான பாடுகளில் வாழ்கிறார்கள். அதை நினைத்து. அவர்கள் நம்மை விட மேன்மையாய் வாழ அனுதினமும் ஜெபிப்போம். நம்மை கோடிக்கணக்கான மக்களைவிட அதிகமாக தேவன் இயேசு ஆசீர்வதித்திருக்கிறார். அதற்காக ஒவ்வொரு நொடிப்பொழுதும் கர்த்தர் இயேசுவை நன்றியோடு உயர்த்தி மகிமைப்படுத்துவோம்.

தினமும் **1 நிமிடமாவது** எங்களுக்காக, இயேசுவின் சமாதானம் ஊழியங்களுக்காக
ஜெபிக்க அன்பாய் கேட்டுக்கொள்கிறேன்.
தேவன் இயேசு நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

**With Deep Love & Affection With Prayers**

உங்கள் அன்புத் தம்பி / அண்ணன்

**- ஏ.எஸ்.வி. ராபின்.**



இயேசுவின் சமாதானம்
மாத இதழ்

**Final Designing & Editing**
RAJLYNT ROBIN B.Sc.,Vis.com., (M.B.A.)
Managing Partner, Rajlynt Exports & Imports

# இயேசு உங்களை உயர்த்துவார்

- ஏ.எஸ்.வி. ராபின்



கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள். அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார். (யாக் 4:10).

நம்மை நம் தாயின் கருவில் உருவாக்கிய கர்த்தர் இயேசு இந்த பூமியில் நம்மை உயர்வாய் வாழ வைக்க விரும்புகிறார். நாமும் உயர்வாய் வாழ வேண்டும் என்றே விரும்புகிறோம்.

## தாழ்மை தரும் உயர்வு

**தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்** (மத். 23:12) என்று தேவன் இயேசு சொல்கிறார். இந்த உலகில் நாம் வாழும் நாட்களில் தேவனுக்கு முன்பாகவும் மனிதர்களுக்கு முன்பாகவும் நாம் தாழ்மையோடு நடந்து கொள்ள வேண்டும். இந்த தாழ்மை போலியாய் இருக்கக் கூடாது. உள்ளத்திருலிருந்து தாழ்மை வரவேண்டும். நம்மை நாம் உயர்த்தக் கூடாது பெருமை கடுகளவு கூட நம்மிடம் இருக்கக் கூடாது. மற்றவர்களை அற்பமாய் எண்ணாமல் அவர்களை நாம் உயர்வாய் எண்ண வேண்டும்.

**மனத்தாழ்மையினால் ஒருவரை ஒருவர் தங்களிலும் மேன்மையாக எண்ண வேண்டும்** என்று பிலிப்பியர் 2:3ம் வசனம் கூறுகிறது. இதற்கு நமக்கு முன்மாதிரி இயேசு ஒருவரே. ஏனென்றால் இயேசு உலகத்தை படைத்த தேவனாக இருந்த போதிலும், அவர் மனுரூபமாய் காணப்பட்டு... சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார். (பிலிப்பியர் 2:8) என்று வாசிக்கிறோம். அண்டசராசரங்களை படைத்த தேவன் இயேசு, இவ்வுலகில் மனிதராய் வாழ்ந்த போது பட்ட பாடுகள், துன்பங்கள், வேதனைகள், அவமானங்கள் ஏராளம், ஏராளம். அதை சிந்தித்து பார்க்கும்போது, நம் பாடுகள் அதைவிட மிகமிகக் குறைவுதான். ஆடுகளை மேய்த்து வந்த தாவீதை தேவன், இஸ்ரவேல் தேசத்தின் ராஜாவாக்கி சிறந்த புகழையும், யுத்தங்களில் வெற்றியையும் கொடுத்து உயர்த்தினார். ஆனால் தாவீது மனத்தாழ்மையோடு வாழ்ந்து தேவனை சந்தோப்படுத்தினார்.

நாம் நம்முடைய வாழ்வில் கஷ்டப்படும் போது கர்த்தர் இயேசுவின் சமூகத்தில் நம்மை தாழ்த்தி ஜெபிக்கிறோம். இதுபோல இயேசு நம்மை உயர்த்தும் போதும், அவரை உயர்த்தி மகிமைப்படுத்த வேண்டும். அதே மனத்தாழ்மையோடு ஜெபிக்க வேண்டும். அப்பொழுது தேவன் இயேசு நம்மை மேலும், மேலும் ஆசீர்வதித்து உயர்த்துவார்.

## உண்மை தரும் உயர்வு

தேவன் சொல்கிறார் **நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும், திரும்பவும் எழுந்திருப்பான்** (நீதி 24:16). நாம் தேவனுக்கு பிரியமாய் உண்மையாய் வாழும் போது, பாடுகள் வரும். ஆனால் தேவன் இயேசு நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார்.

சிலருக்கு வியாதி வரும் போது உடனே மற்றவர்கள் அல்லது குடும்பத்தினரே அவர்களை குற்றஞ்சாட்டுவார்கள். இவர்கள் செய்த பாவத்திற்கும், அக்கிரமத்திற்கும் தேவன் கொடுத்திருக்கும் தண்டனை என்று சொல்லி, வியாதிப்பட்டவர்களை வேதனைப்படுத்துவார்கள். இது தேவன் இயேசுவையும் துக்கப்படுத்தும். பைபிளில், எசேக்கியா ராஜா உண்மையும், உத்தமுமாய் வாழ்ந்து தேவனுக்குப் பிரியமாய் வாழ்ந்து நாட்டை அரசாண்டார். ஆனாலும், கேன்சர் நோய் அவரை தாக்கினதால் மரணம் அவரை நெருங்கியது. ஏசாயா தீர்க்கதரிசி, அவரிடம் நீ இறந்து விடுவாய் என்று கர்த்தர் சொல்கிறார் என்றார்.

உடனே எசேக்கியா ராஜா தேவனை நோக்கி, நான் உமக்கு முன்பாக உண்மையும், மன உத்தமமுமாய் நடந்து **உமது பார்வைக்கு நலமானதை செய்தேன் என்பதை நினைத்தருளும்** என்று கூறி, மிகவும் அழுதார். (ஏசாயா 38:3). இதனால் தேவனுடைய உள்ளம் உருகியது. அவருக்கு 15 ஆண்டுகள் ஆயுளைக் கூட்டிக் கொடுத்தார். இதுபோல நீங்களும் வியாதி, உடல் பெலவீனம், மனச்சோர்வு, கடன்பிரச்சினை, தொழில் - வியாபார நஷ்டம், வேலையில்லாத நிலை, வறுமை, குழந்தையின்மை, திருமணம் தடைபட்ட நிலை, கோர்ட், கேஸ் பிரச்சினைகளால் கலங்கிக் கொண்டிருக்கலாம். நான் வீழ்ந்து விட்டேன் என கண்ணீர் வடிக்கலாம். எசேக்கியா ராஜாவை உயிர்ப்பித்த தேவன், உங்களையும் விடுவித்து உயர்த்துவது உறுதி. தேவன் இயேசுவை உறுதியாய் பிடித்துக் கொள்ளுங்கள்.

## பரிசுத்தம் தரும் உயர்வு

நம்மை அரசாளும் ராஜாதி ராஜா இயேசு மகா பரிசுத்தர். இந்த தேவன் சொல்கிறார், **நான் பரிசுத்தர். ஆகையால் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்.** (லேவி 19:2). நாம் பரிசுத்தமாய் வாழ வேண்டுமென்றால் நமக்குள் பரிசுத்த ஆவியானவர் தங்கி இருக்க வேண்டும். நாம் தேவனை துதித்து, அவரை மகிமைப்படுத்தி உயர்த்த வேண்டும். அப்பொழுது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரியேக தேவன் நமக்குள் தங்குவார். மட்டுமல்ல நம்மை உயர்த்துவார். அப்பொழுது நம் பேச்சு, செயல், சிந்தனை, பார்வை, உடை, வாழ்க்கை எல்லாம் பரிசுத்தமாய் காணப்படும்.

பாவம் செய்யும் சூழ்நிலையை சாத்தான் உருவாக்கினாலும் இயேசு நம்மை, பரிசுத்தமாய் காத்துக் கொள்வார். யோசேப்பு இதற்கு ஒரு நல்ல



உதாரணம், வாலிபனாகிய யோசேப்பு பாவம் செய்ய தூண்டிய எஜமானியிடமிருந்து விலகி ஓடி, **தன் பரிசுத்தத்தை காத்துக் கொண்டார்** (ஆதி. 39:9). பின்பு எகிப்து தேசத்தில் ராஜாவுக்கு அடுத்தபடியாக தேசம் முழுவதிற்கும் அதிகாரியாக தேவன் யோசேப்பை உயர்த்தி ஆசீர்வதித்தார். ஒரு வேளை இதை வாசிக்கிற நீங்கள் பரிசுத்தமில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கலாம். உடனே பரிசுத்தர் இயேசுவிடம் பாவங்களை அறிக்கை செய்து, அழுது ஜெபம் செய்து பாவத்தை விட்டுவிடுங்கள். அவர் உங்கள் பாவங்களை தம்முடைய பரிசுத்த ரத்தத்தால் கழுவி, உங்களை பரிசுத்தப்படுத்துவார். பாவ மன்னிப்பு தந்து உங்களை சந்தோப்படுத்துவார்.

இதற்கெல்லாம் தேவஅன்பு மிக அவசியம். ஆகவே, இயேசு சொல்கிறார் என்னிடம் அன்பை கேட்டு பெற்றுக் கொள்ளுங்கள். ஏனென்றால் நான் அன்பின் தேவன். என் அன்பினால் நீங்கள் நிரப்பப்பட்டால் மட்டுமே தாழ்மையாகவும் உண்மையாகவும், பரிசுத்தமாகவும் வாழ முடியும். முடிவில் உயர்ந்த உன்னதமான பரலோகத்திலும் என் மடியில் செல்லப்பிள்ளையாய் நீங்கள் அமர முடியும். ஆகவே, இயேசுவுக்கு பிரியமாய் வாழ்ந்து, இயேசுவை சந்தோப்படுத்துவோம். **இயேசு நம்மை இப்பூமியிலும் உயர்த்துவார்.**









RAJLYNT ROBIN



https://www.fb.com/RajlyntRobin




அமெரிக்க ஜனதிபதியாக இருந்த **ஆப்ரகாம் லிங்கனுக்கு** ஒரு சாதாரண மனிதர், சல்யூட் அடித்து மரியாதை செய்தார். உடனே ஆப்ரகாம் லிங்கன் தன் தலையிலிருந்த **தொப்பியை கழற்றி,** சல்யூட் அடித்து, பதில் மரியாதை செய்தார். அருகிலிருந்தவர்கள், ஒரு சாதாரண மனிதருக்கு ஏன் இவ்வளவு அதிகமான மரியாதை செய்தீர்கள் என்று, கேட்டனர். மரியாதை செய்வதில் என்னைவிட அவர் உயர்ந்துவிடக் கூடாது. பிறர் நமக்கு கொடுக்கும் மரியாதையை விட, நாம்அவர்களுக்கு கொடுக்கும் மரியாதை அதிகமாக இருக்க வேண்டும். அதற்காக அப்படி செய்தேன் என்று ஆபிரகாம் லிங்கன் பதில் சென்னார்.

**கனம் பண்ணுகிறதில் ஒருவருக்கொருவர், முந்திக் கொள்ளுங்கள்** (ரோமர் 12: 10) என்ற வசனத்தின் படி, நாம் பிறரை அற்பமாக எண்ணாமல் அவர்களுக்கு அதிக மரியாதை செலுத்துவோம். ஆண்டவர் இயேசு சந்தோப்படுவார்.நம்மையும் சந்தோப்படுத்துவார்.

**Honour one another above yourselves** (Rom. 12:10).

பெண்கள் பகுதி

# உயர்ந்த அன்பு



- பொற்செல்வி ராபின்

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருக்கே மகிமை!

**என் பாசத்திற்குரிய சகோதரியே,**

**இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரால் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். தேவன் உங்கள் எல்லோரையும் ஆசீர்வதிப்பாராக.**

## கர்த்தர் உங்களோடு

இயேசுவைக் குறித்து தாவீது, சங்கீதம் 46:11ல் சேனைகளின் கர்த்தர் நம்மோடு இருக்கிறார். யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர் என்று கூறுகிறார். ஆம், அன்பு சகோதரியே, கண்ணீரோடும், கவலையோடும் இருக்கிறீர்களா? உங்களுக்கு இயேசுவே ஆறுதல். அவர் உங்கள் அருகே வந்து, உங்களை இவ்வாறு தேற்றுகிறார். மகளே, நீ ஏன் அழுகிறாய்? நீ அழாதே, உன் பிரச்சனைகளை மாற்றி உனக்கு சமாதானம் தருகிறேன். **நானே உனக்கு உயர்ந்த அடைக்கலமாய் இருக்கிறேன்.** இதே சங்கீதத்தில், 9 ம் வசனத்தில் இறைவன் இயேசு யுத்தங்களை ஓயப் பண்ணுகிறவர் என்று வாசிக்கிறோம். சாத்தான் உங்கள் வாழ்வில் வேலை, தொழில் வியாபாரத்தில் கொண்டுவரும் போராட்டங்கள், யுத்தங்கள் போல தோன்றுகிறதா? இயேசு உங்கள் வாழ்வில், யுத்தங்களை வெற்றியாக மாற்றுவார். அவர் உங்களுக்கு ஜெயம் கொடுக்கும் தேவன்.

## நீங்கள் அவரோடு

நான் எப்பொழுதும் உம்மோடு இருக்கிறேன். என் வலது கையைப் பிடித்து தாங்குகிறீர். **உம்முடைய ஆலோசனையின் படி நீர் என்னை நடத்தி முடிவிலே என்னை மகிமையில்** (பரலோகத்தில்) ஏற்றுக் கொள்வீர் என்று சங்கீதம் 73:23, 24ம் வசனங்களில் ஆசாப் என்ற ராஜா நம் பிதாவாகிய தேவனின் அன்பை விளக்கியிருக்கிறார். அடிக்கடி பைபிள் வாசித்து ஜெபியுங்கள். வீட்டு வேலைகளை செய்து கொண்டிருந்தாலும், உள்ளத்தில் தேவன் இயேசுவை துதித்து மகிமைப்படுத்துங்கள். சமயம் கிடைக்கும் போது முழங்காலில் நின்று மற்றவர்களுக்காக அதிகமாக ஜெபியுங்கள். சுருக்கமாக உங்கள் காரியங்களுக்காக ஜெபித்தால் போதும். உங்கள் பிரச்சனைகளை அவர் பொறுப்பெடுத்துக் கொள்வார். இப்படி நீங்கள் இயேசுவோடு நெருங்கி உறவாடலாம். உங்களுக்கு அருமையானவரை நீங்கள் இழந்து, அழுது கொண்டிருக்கிறீர்களா? **இயேசுவை உறுதியாய் பிடித்துக் கொள்ளுங்கள்.** அவரை துதியுங்கள். உங்களுக்கு சமாதானம் தந்து, உங்களை அவர் தேற்றுவார். இந்த உலகத்தில் மனிதர்களின் வாழ்வு நிரந்தரமல்ல என்று நினைத்து ஆறுதலடையுங்கள்.

## தாகத்திற்கு ஜீவ தண்ணீர்.

தேவாதி தேவன் இயேசுவை தாகத்தோடு தேடுபவர்கள் மட்டுமே அவருடைய உயர்ந்த அன்பையும், அவருடைய கிருபையையும் இரக்கத்தையும் விளங்கி கொள்ள முடியும். ஆகவே அவரை தாகத்தோடு தேடுங்கள். மானானது (மான்) நீரோடைகளை வாஞ்சித்து கதறுவது போல, **தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்து கதறுகிறது என்று தாவீது** சங்கீதம் 42:1 எழுதியிருக்கிறார். இவ்வுலகில் பொன், வெள்ளி, பணம், புகழ், சொத்து மனிதர்களின் புகழ்ச்சி நிரந்தரமல்ல அல்ல. அது தரும் மகிழ்ச்சியும்

நிரந்தரம் அல்ல. மனிதர்களின் அன்பும், நிரந்தரம் அல்ல. உங்களை நேசிக்க யாருமே இல்லையா? என்னிடம் பணம் இருக்கிறது. எல்லாம் இருந்தும் நிம்மதி இல்லையா? உங்களை கணவர் உங்களை வெறுத்து தனிமையில் தவிக்க விட்டிருக்கிறாரா? இயேசு உங்களை ஒவ்வொரு நாளும் தம்முடைய உயர்ந்த சிறந்த அன்பினால் நேசிப்பவர். அவரை நேசித்து அன்பை பெற்றுக் கொள்ளுங்கள்.

## சமயத்திற்கேற்ற வார்த்தை

நீங்கள் உங்கள் குடும்பத்தாரைக் குறித்த கவலையோடு இருக்கலாம். கோர்ட், கேஸ் பிரச்சனைகள் உங்களை தொல்லை செய்யலாம். உங்கள் எதிர்காலத்தை குறித்த கேள்வியோடு நீங்கள் காணப்படலாம். பிள்ளையின் திருமணம் தடைபடுவதால் கலங்கலாம். உள்ளம் உடைந்த நிலையில் பணக்கஷ்டத்தோடு நீங்கள் இருக்கலாம். இயேசு நிச்சயம் உங்கள் வாழ்வை மாற்றுவார். இயேசு உங்களுக்கு அற்புதங்களை செய்வார். உங்கள் குடும்பத்தினர் மூலமும், நீங்கள் மகிழும்படி **தேவன் இயேசு அற்புதங்கள் செய்வார்.** சமயத்திற்கு ஏற்ற வார்த்தைகளாக பைபிளில் வரும் தேவனுடைய வார்த்தைகள் மூலம் உங்களையும் ஆறுதல்படுத்தி, நீங்கள் மற்றவர்களை ஆறுதல் படுத்தவும் **தேவன் இயேசு உங்களை பயன்படுத்துவார். இந்த வசனத்தை வாசியுங்கள். இளைபடைந்தவனுக்கு** (ஆறுதலற்ற, பாதிக்கப்பட்டவர்களுக்கு) சமயத்திற்கு ஏற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு கர்த்தராகிய ஆண்டவர் எனக்கு கல்விமானின் நாவை (அறிவை) தந்தருளினார். (ஏசா 49:14)

உயர்ந்த அன்பு தருபவர் இயேசு. இவர் நமக்காக சிலுவையில் உயிர் கொடுத்தை ஒவ்வொரு நாளும் நம் நினைவில் வைத்திருப்போம். இதை அவர் நம்மிடம் எதிர்ப்பார்க்கிறார்.



### இந்த ஊழிய தேவைக்கான உங்கள் ஜெபம்

இயேசுவின் சமாதானம் ஊழியத்தின் எல்லை ஒவ்வொரு மாதமும் விரிவாகிவருவதால், பணத் தேவை ஒவ்வொரு மாதமும் அதிகமாகிறது. ஒரு மாதத்திற்கு பல லட்ச ரூபாய் தேவைப்படுகிறது. இத்தேவைகள் சந்திக்கப்பட மறக்காமல் நீங்கள் உங்கள் ஜெபத்தில் தாங்கும் படி அன்போடு கேட்டுக் கொள்கிறோம். தேவன் இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக.

### உங்கள் நன்கொடை

நீங்கள் இவ்வூழியத்திற்கு நன்கொடை அனுப்ப விரும்பினால் இந்தியாவில் நீங்கள் எங்கு வசித்தாலும் கீழ்கண்ட வங்கிக் கிளைகளில் நேரடியாக பணத்தைச் செலுத்தலாம் அல்லது மணியார்டர், டி.டி. மூலமாக நன்கொடை அனுப்பலாம். வெளிநாட்டில் வசிப்பவர்களும் நன்கொடை அனுப்ப வசதியாக FCRA சான்றிதழ் இந்த ஊழியத்திற்கு இந்திய அரசால் அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவரம் www.peaceofjesus.org

| | | |
|---|---|---|
| ICICI Bank | PEACE OF JESUS MINISTRY & TRUST<br>A.S.V. ROBIN | A/c No. 615201134411<br>A/c. No. 615201500867 |
| IDBI BANK | PEACE OF JESUS MINISTRY | A/c No. 006102000034441 |
| State Bank of India | A.S.V. ROBIN | A/c. No. 31682257041 |
| TMB | A.SOLOMON VICTOR ROBIN | A/c. No. 058100050303244 |
| Indian Overseas Bank | A.S.V. ROBIN | A/c. No. 010601000025999 |
| इंडियन बैंक Indian Bank | YESUVIN SAMADHANAM<br>A.S.V. ROBIN | A/c No. 725420502<br>A/c. No. 434465781 |

? பதில்

ஏ.எஸ்.வி. ராபின்

# சாபம் இருக்கிறதா? இல்லையா?

இயேசு கிறிஸ்து சிலுவையில் அடிக்கப்பட்டதால், நமக்கு சாபம் இல்லை என சிலரும், மனிதன் செய்யும் பாவம் சாபமாக மாறும் என சிலரும் சொல்கிறார்கள். இதில் எது சரி என பலர் கேட்கும் கேள்வி இது.

ஆதாம், ஏவாள் செய்த பாவத்தினால் தேவன் சொன்னது, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்... அதில் முள்ளும் குறுக்கும் முளைக்கும். (ஆதி. 3:17). ஆதாம், ஏவாள் செய்த பாவத்தின் நிமித்தம் தொடர்ந்து மனிதர்கள் பாவம் செய்தார்கள்.

பாவம் இல்லாத இயேசு கிறிஸ்து தம்முடைய பரிசுத்த ரத்தத்தை சிந்தி, சாபமான சிலுவையில் தன் உயிரை விட்டார். ஆனால் இன்றும் அவர் உயிரோடு இருக்கிறார். இதனால், பரலோகத்திற்கும் நமக்கும் இடையில் இருந்த தடுப்பு சுவர் உடைக்கப்பட்டது. ஆனால், மனிதர் செய்யும் பாவம் அக்கிரமம் அநீதி, சாபமாக மாறும். அப்பொழுது இப்பூமியிலும் முட்களில் வாழ்வது போல இருக்கும். முடிவில் பரலோக வாழ்வை இழந்து நரகத்திற்கு செல்ல நேரிடும். புதிய ஏற்பாட்டில் மத்தேயு 25:31ல் மகிமையுள்ள **இயேசு ராஜா மகிமையான சிங்காசனத்தில் அமர்ந்திருப்பார்** என்றும், 41ஆம் வசனத்தில் இடது பக்கம் நிற்பவர்களை, சபிக்கப்பட்டவர்களே நித்திய நரகத்தில் போங்கள் என்று கட்டளை கொடுக்கிறார். இடது பக்கத்தில் நிற்கிறவர்கள் யாரெனில்; பசியாய் இருக்கும் ஏழைகளுக்கு தண்ணீர், உணவு கொடுக்காதவர்கள், நோயில் வாடுபவர்களை விசாரிக்காதவர்கள், தண்டனை பெற்று ஜெயிலில் இருப்பவர்களை அல்லது அவர்கள் குடும்பத்தாரை பார்க்காதவர்கள், பாவம் செய்து, சாத்தானிடம் சிறைப்பட்டவர்களுக்காக ஜெபிக்காதவர்கள். இவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று, இயேசு சொல்லியிருக்கிறார். ஆகவே, ஏழைகளை திக்கற்றோரை, ஒடுக்கப்பட்டோரை நேசித்து, ஜெபித்து உதவி செய்தால், அது இயேசுவுக்கு உதவி செய்ததாகும். இல்லாவிட்டால் இது சாபம் என பைபிளில் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது.

**சாபத்தைக்குறித்த வேதவசனங்களில் சில.**

❇ உதடுகளின் (வீண்) பேச்சு, அவர்கள் வாயின் பாவமாய் இருக்கிறது. அவர்கள் இட்ட சாபமும், சொல்லிய பொய்யும் ஆகியவை நிமித்தம் தங்கள் பெருமையில் அகப்படுவார்கள். (சங். 59:12) ❇ துன்மார்க்கருடைய வீட்டில் கர்த்தருடைய சாபம் இருக்கிறது. (நீதி. 3 : 33) ❇தன் கண்களை ஏழைகளுக்கு விலக்குகிறவனுக்கோ அனேக சாபங்கள் வரும் (நீதி . 28 :7) ❇ தேவனுடைய வார்த்தையை கேளாமல் போனால் சாபம் (எரே 29:18) ❇ பொல்லாப்பு, அருவருப்பு போன்றவை சாபம் (எரே. 44:22) ❇ விபச்சாரம் செய்பவர்கள், பாவத்தை விடாதவர்கள் பொருளாசைக்காரர்களுக்கு சாபம் (2பேது. 2:14)

காரணமில்லாமல் விட்ட சாபம் தங்காது. (நீதி . 26:27). ஆனால் ஏதாவது காரணமாய் பிறர் இடும் சாபம் பலிக்கும். பிறர் உண்மையாய் பாதிக்கப்பட்டு, ஏமாற்றப்பட்டு பெருமூச்சு விட்டால், கண்ணீர் சிந்தினால், அதற்கு காரணமானவர்களின் மேல் தேவ கோபம் வரும். அது சாபமாக மாறும். முடிவில் அவர்கள் நரகத்தில் பங்கடைவார்கள். ஆகவே சாபம் இல்லாத வாழ்க்கையான பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க இயேசுவிற்கு பிரியமாய் வாழ்வோம். ஏனென்றால், பரலோகத்தில் தான், **இனி ஒரு சாபமும் இராது.** (வெளி 22:3) என்பதை பார்க்கிறோம்.

ஆகவே **இப்பூமியில் சாபம் உண்டு.** இதை ஆசீர்வாதமாக மாற்ற **இயேசுவின் கிருபைக்காக கெஞ்சி அவரிடம் மன்றாடுவோம்.**

YouTube

ஏ.எஸ்.வி. ராபின் - பொற்செல்வி ராபின் கொடுத்த தேவ செய்திகளைக் கண்டு
தேவன் இயேசு தரும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்
keyword : ASV Robin, Rajlynt Robin, Porchelvi Robin





- பொற்செல்வி ராபின்

# உலகமா? இயேசுவா?

வாலிபர் பகுதி

அன்பு தம்பி, தங்கையே.
பரிசுத்த தேவன் இயேசுவின் பெயரால் உன்னை அன்புடன் வாழ்த்துகிறேன். தேவாதி தேவனுக்கே மகிமை!

## தேவன் உயர்த்துகிறார்

எளியவனையோ சிறுமையிலிருந்து எடுத்து உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கிறார் என்று சங்கீதம் 107:41 ம் வசனத்தில் நம் தேவன் கூறுகிறார். அன்பு தம்பி, தங்கையே சிறுமைப்பட்ட நிலையில் நீ வாழ்ந்து கொண்டிருக்கலாம். ஏழ்மையில் வாழ்ந்து கொண்டிருக்கலாம். அன்பு கிடைக்காத நிலையில், திக்கற்ற நிலையில் நீ வாழ்ந்து கொண்டிருக்கலாம். ஆனால் இயேசு உனக்கு சொல்கிறார், உன்னை அன்போடு அரவணைத்து உன்னை உயர்ந்த நிலையில் வாழ வைப்பேன். **நீ அழாதே. நீ என்னுடைய செல்லப்பிள்ளை.** இயேசு ஆறுதல் தரும் தேவன் என்பதை நினைத்து, மகிழ்ச்சியாய் வாழக் கற்றுக்கொள்.

## உபவாச ஜெபம்

நீ உபவாசித்து ஜெபி. இதுவரை நீ உபவாசித்து ஜெபம் செய்யாமல் இருந்திருக்கலாம். இனி வாரம் ஒரு முறையாவது உபவாசித்து ஜெபி. உபவாச ஜெபத்தினால் உன் துன்பங்கள் விலகும். உன் கண்ணீரை தேவன்இயேசு துடைப்பார். அநேக நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் நீ பெற்றுக் கொள்ள கர்த்தர் இயேசு அருள்புரிவார். உன் கண்ணீருக்கும், உன் துன்பங்களுக்கும் காரணமான சாத்தானை **தேவன் இயேசு ஒடுக்கி உன்னை விடுதலையாக்குவார்.** உன் உபவாச ஜெபத்தினால் உன்னுடைய, உன் குடும்பத்தினரின் நோயை அவர் குணமாக்குவார். உன் துன்பங்களுக்கும் காரணமான சாத்தானை தேவன் இயேசு ஒடுக்கி உன்னை விடுதலையாக்குவார். உன் உபவாச ஜெபத்தினால் உன் குடும்பதினரின் பாவ வாழ்க்கையை இயேசு மாற்றுவார். உன் குடும்பத்தில் சாபம் இருந்தால் இயேசு சாபத்தை முறித்து உன் குடும்பத்தை ஆசீர்வதிப்பார்.

## இதயத்தை கொடு

ஆண்டவர் இயேசுவுக்கு உன் இதயத்தை கொடு. அதில் அவர் வந்து தங்குவார். அவர் உன் இதயத்தில் வந்து தங்கி உன்னை மகிழப் பண்ணுவார். இதுவே உனக்கு அவர் தரும் மிகப்பெரிய சமாதானம் நிறைந்த வாழ்வு. உலகத்தில் உபத்திரவங்கள், ஆபத்துக்கள் உண்டு. தேவன் இயேசுவின் துணையோடு இவற்றை நீ ஜெயிக்க முடியும். **உலகத்தில் பாவங்கள் உண்டு. பரிசுத்தப்படுத்தும் பரிசுத்த தேவன் இயேசுவின் உதவியோடு இவற்றை நீ ஜெயிக்க முடியும்.** நீ கவலையோடு இருக்கும் போது பைபிளில் உள்ள வாக்குத்தத்த வசனங்களை வாசி. இந்த வசனங்கள் மூலம் கர்த்தர் இயேசு உன்னை தேற்றி உன்னை சந்தோப்படுத்துவார். நீ தேவனுக்கு பயந்து வாழ்ந்தால், உனக்கு இயேசுவின் அரவணைப்பும், பாதுகாப்பும், நிச்சயம் கிடைக்கும்.



## இயேசுவே ஜீவன்

அண்ட சராசரங்களையும் எல்லா மனிதர்களையும் உருவாக்கி அராசாளுகிற தேவாதி தேவன் இயேசு உனக்கு இரண்டில் ஒன்றை தேர்வு செய்யும் உரிமையை தந்திருக்கிறார். உனக்கு என்ன வேண்டும் இயேசுவா? உலகமா? உலகத்தில் உள்ள பாவத்தை நீ விரும்பி சாத்தானுக்கு அடிமையாய் வாழ்ந்து, நிம்மதி இழந்து, வேதனைப்பட விரும்புகிறாயா? அல்லது தேவன் இயேசுவை ஏற்றுக் கொண்டு பாவமில்லாத அக்கிரமம் இல்லாத வாழ்வை வாழ விரும்புகிறாயா? சாத்தான் விரும்புகிறபடி நீ வாழ்ந்தால் இயேசு தரும் நித்திய ஜீவனை பரலோக நிரந்தர வாழ்வை நீ இழக்க நேரிடும். இயேசுவுக்கு பிரியமான வாழ்வை நீ வாழ்ந்தால், உன் உள்ளத்தில் தேவன் இயேசுவின் சமாதானம் தங்கும். மனமகிழ்ச்சி உண்டாகும். இவ்வுலகிலும் ஆசீர்வாதம் கிடைக்கும். முடிவில் பரலோகத்தில் **உன் ஆத்துமா நிரந்தரமாய் வாழும். நரகத் தீயில் விழாமலும் நீ தப்பலாம்.** இப்பொழுதே **இயேசு வேண்டுமா?** அல்லது உலக பாவங்களையும், சிற்றின்பங்களையும் காட்டி உன்னை ஏமாற்ற பார்க்கும் **சாத்தான் வேண்டுமா?** என்று தீர்மானம் செய்.

## உயிர்காத்த தேவன் இயேசு

அன்பு சகோதரிக்கு,

நான் சாப்ட்வேர் இன்ஜினியராக வேலை செய்கிறேன். குடும்பத்தில் சில பிரச்சனை காரணமாக தற்கொலை செய்வதற்காக பல தூக்க மாத்திரைகளை சாப்பிட்டேன். சிறிது நேரத்தில்,மயக்க நிலை ஏற்பட்டது.

அப்பொழுது எனக்குள் பயம் வந்தது. உடனே, உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, என் உயிர் காக்கப்பட கர்த்தர் இயேசுவிடம் ஜெபிக்கச் சொன்னேன். நீங்களும், இயேசுவின் பெயரால் ஜெபித்து, தைரியப்படுத்தினீர்கள். சிறிது நேரத்தில், பழைய சுயநினைவுக்கு நான் வந்தேன் என் ஜீவனைக் காப்பாற்றி,என்னை வாழ வைத்த தேவாதி தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**ரோஸி,**
சென்னை

## உங்கள் ஜெப விண்ணப்பம்

உலகில் எங்கு வசித்தாலும், உங்கள் ஜெபக்குறிப்புகளை எங்களுக்கு இமெயில் (Email) மூலம் அனுப்பி வையுங்கள். ஜெபித்து, கர்த்தர் இயேசு தரும் பதிலை நாங்கள் உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம். நாங்களும், இயேசுவின் சமாதானம் ஜெபக்குழுவினரும், ஜெப வீரர்களும் உங்களுக்காக தொடர்ந்து ஜெபிப்போம். ஆனால், உங்கள் தனிப்பட்ட வாழ்வில் நீங்கள் இயேசுவோடு நெருங்கி அவருக்கு பிரியமாய் வாழுங்கள் அப்பொழுது நம் ஜெபத்தை கேட்டு, தேவன் இயேசு உங்களை ஆசீர்வதிப்பார். (தானியேல் 9:23 ன் படி)

asvrobin@peaceofjesus.org
pochelvirobin@peaceofjesus.org
rajlyntrobin@peaceofjesus.org
prayers@peaceofjesus.org

**www.peaceofjesus.org**

Phone : +91 9994510610 (Jayaraj)

எங்கள் முகவரி
**இயேசுவின் சமாதானம்**
393, பேஸ் 2,
ஹவுசிங் யூனிட், சிட்கோ,
கோயம்புத்தூர் – 641 021,
தென் இந்தியா



**Our Address**
**PEACE OF JESUS**
393. Phase 2,
Housing Unit, SIDCO,
Coimbatore - 641 021.
S.India

- பொற்செல்வி ராபின்

தொடர் 107

# இயேசுவின் ரகசிய வருகை




## உண்மையாய் இருப்போம்

நீ மரண பரியந்தம் உண்மையாய் இரு. அப்பொழுது **ஜீவ கிரீடத்தை உனக்கு தருவேன்** என்று பைபிளில் உள்ள வெளிப்படுத்தல் 2 : 10ம் வசனத்தில் இறைவன் இயேசு கூறுகிறார். மரணம்வரைக்கும் ஆண்டவர் இயேசு விரும்புகிறபடியே வாழ்பவர்களுக்கு, சாத்தானின் கெட்ட ஆலோசனைக்கு செவி கொடாமல் தேவன் இயேசுவுக்கு பயந்து வாழ்வோருக்கு மரணத்திற்கு பின்பு பரலோகத்தில் ஜீவ கிரீடம் சூட்டி கௌரவிப்பார். நாம் ஒருவரும் அதை இழந்து விடக் கூடாது. கோடிக்கணக்கான ஆண்டுகள் நாம் இயேசுவோடு வாழ வேண்டும்.

## தேவன் நியாயாதிபதி

தேவன் ஒரு பக்கம் அன்பு நிறைந்தவர்தான். ஆனால் தீமை செய்வோருக்கும், பெருமை கொண்டோருக்கும் தேவன் எதிர்த்து நிற்கிறார். தேவன் என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்ற பயம் இல்லாமல் துணிகரமாக மனிதர்களுக்கு பொல்லாப்பு செய்கிறவர்களுக்கு, **தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறார்** (எபிரெயர் 2:29). தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். (யாக்கோபு 4 :6). ஆனால் நீதிமான்கள் கூப்பிடும் போது கர்த்தர் அதைக்கேட்டு, அவர்களை **அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார்** (சங்கீதம் 34 : 17).

## ஜெபத்திற்கு பதில்

அவர் நெரிந்த நாணலை முறியாமலும், மங்கி எரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாய் வெளிப்படுத்துவார் என்று ஏசாயா 42:3ல் காண்கிறோம். ஏழை, எளிய மக்கள், ஒடுக்கப்படும், சிறுமைப்படுத்தப்படும் மக்கள், ஊனமுற்றோர், காரணமின்றி கணவரால் மனைவியால் வெறுக்கப்பட்டவர், கைவிடப்பட்டோர், தாய்-தந்தை இல்லாத பிள்ளைகள், காரணமின்றி பெற்றோரால் வெறுக்கப்பட்டோர் இப்படிப்பட்டவர்களுக்கு **தேவன் இயேசு ஆதரவாய் இருக்கிறார்.** இவர்களின் ஜெபத்திற்கு பதில் தருவார். இயேசு நீதி செய்யும் தேவன். ஆகவே நாம் நீதி செய்து தேவனுக்கு பயந்து வாழ்வோம்.



- தொடரும்




அறிவியல் வளர்ந்த நவீன காலத்தில் நாம் வாழ்கிறோம். இதில் கம்ப்யூட்டர், மொபைல் போனில் பயன்படுத்தப்படும் இன்டர்நெட் முக்கியமான ஒன்று. இது இன்றைய வாழ்வுக்கு தேவையான ஒன்று. ஆனால், இதன் மூலம் உலகமெங்கும் நன்மை பெற்றவர்களைவிட துன்பப்படுகிறவர்கள் மிக மிக அதிகம். இதில், சிறுவர்கள், பள்ளி, கல்லூரி மாணவ - மாணவியர், வாலிபர்கள், திருமணாமாகாதவர்கள் மட்டுமின்றி திருமணமானவர்களும் சிக்கி **தங்கள் வாழ்வை சீரழிக்கின்றனர்.**

## மொபைல் போன்

ஆரம்ப நாட்களில் மொபைல் போன் பேசுவதற்கும், எஸ்.எம்.எஸ். (குறுஞ்செய்தி அனுப்ப மட்டும் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இன்று கையடக்க கம்ப்யூட்டராக இது மாறிவிட்டது. அத்தனை தொலைத்தொடர்பு வசதிகளும் இதில் அடங்கியிருக்கிறது. போட்டோ, வீடியோ, வாய்ஸ் ரெக்கார்டிங், பேஸ்புக், வாட்ஸ்அப், ட்விட்டர், இமெயில், ஹேங்ஹவுட், யூடியூப், கூகுல், கூகுல் பிளஸ், வெப்சைட், இன்ஸ்டாகிராம் போன்ற பல அடங்கும்.

## மதிமயக்கம்

பேஸ்புக்கில் பல சிறுவர்கள், வாலிபர்கள் தங்களையும், குடும்பத்தினரையும், படிப்பு, வேலையையும் மறந்து மதிமயங்கி சிக்கி உள்ளனர். பேஸ்புக்கில் 100ல் 95 சதவீதம் பொய்யான தகவல் ஆகும். அதில் உள்ள பெயர், போட்டோ, மற்ற தகவல் அனைத்தும் பொய்யானவைகள். இதை நம்பி அனேக வாலிபர்கள் எதிர்பாலரை தொடர்பு கொண்டு, திருமணம் செய்து கொள்கிறார்கள். பின்பு தான் தாங்கள் ஏமாற்றப்பட்டது தெரிய வருகிறது. ஆகவே முன்பின் தெரியாத ஒருவரை நம்புவதை விட்டுவிட்டு உங்களைப் பெற்ற தாய், தந்தையை நம்புங்கள். அவர்கள் ஏற்ற வேளையில் உங்களுக்கு ஏற்ற துணையை, தீர விசாரித்து ஜெபத்தோடு தேர்ந்தெடுத்து தருவார்கள். நீங்களும், உங்களை உருவாக்கிய இயேசுவை அதிகமாக தேடுங்கள். அவர் உங்களுக்கு போதித்து, நீங்கள் நடக்க வேண்டிய வழியை உங்களுக்கு காட்டி, உங்கள் மேல் கண்களை வைத்து, **அவர் உங்களுக்கு ஆலோசனை சொல்வார்.** (சங். 32:8).

## பாவ வாழ்வு

சிலர் மிஸ்டுகால் கொடுப்பார்கள். சில நம்பருக்கு போன் செய்து எதிர்பாலர் என்றால், ஆரம்பத்தில் அன்பாய் பேசுவார்கள். பின்பு அவர்கள் உங்களை மயக்கி, ஆபாசமாக பேசி, தங்கள் வலையில் சிக்க வைப்பார்கள். பின், பாவம் செய்யும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் குடும்பத்தில் பிரச்சனை கடைசியில் விவாகரத்து, கொலை, தற்கொலை என்ற சூழ்நிலை உருவாகிறது. **இப்படி தங்கள் வாழ்வை தொலைத்துக் கொண்டிருப்போர் ஏராளம், ஏராளம்.**

## இயேசுவோடு தொடர்பு

தொலைத் தொடர்புக்கு பணம் செலவு செய்து வாழ்வை சீரழிப்பதை விட்டுவிடுங்கள். மிகத் தொலைவில் பரலோகத்தில் இருக்கும் நம் தேவன் இயேசுவை செலவின்றி, ஜெபத்தில் தொடர்பு கொள்ளுங்கள். அப்பொழுது அவர் உங்கள் அருகில் வந்து, உங்கள் உள்ளத்தை கண்டு, உங்களில் தங்கி வாழ்வார். **இந்த பரிசுத்த ஆவியானவர் தரும் மகிழ்ச்சி, பரவசத்திற்கு ஈடாக இந்த உலகில் வேறு எதுவும் இல்லை.** ஆகவே, ஜாக்கிரதையாய் நம்மையும், நம்முடைய ஆத்துமாவையும் பாவமில்லாமல் காத்துக் கொள்வோம்.

Registered with Registrar of News Paper for India
RNI / TNTAM / 14783 / 2002

Postal Regsitration No. CB / 001 / 2012 - 2014
தனிப்பிரதி ரூ. 4/- ஆண்டு சந்தா - ரூ. 40/-

## இயேசுவின் சமாதானம் கடந்த மாத ஊழியம்









சென்னை அக்டோபர். 27ம் தேதி டாக்டர் வி.ஜி. செல்வராஜ் நடத்தும் சுகஜீவ தேவ சபையில் ஏ.எஸ்.வி. ராபின் தேவசெய்தி கொடுத்த போது.

**திரியேக தேவனுக்கே மகிமை உண்டாவதாக**

# இயேசுவின் சமாதானம்

உடைந்த உள்ளங்களுக்கு

## மருத்துவமனை ஊழியம்











நோயில் வாடுபவர்களுக்கு பொற்செல்வி ராபின் ஆறுதல் சொல்லி, ஜெபித்து, பணஉதவி செய்த போது

(இடம் : அரசு மருத்துவமனை, கோவை)

Owned & Published By A.S. ROBIN Managing Trustee on behalf of Peace of Jesus Ministry & Trust 393, Phase - 2, Housing Unit, Sidco, Coimbatore - 641 021. and Printed at Vimal Offset Printing, Coimbatore - 641 012. India Editor : A.S.V. ROBIN